# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

# MCOP. No.242/2014

2026-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 29-ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.2 வது** நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தர்மர் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். என்னுடைய ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.9,

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை**:

விபத்து நடந்தது தொழிற்சாலைக்கு உள்ளே என்றால் சரிதான். மாற்று டிரைவருக்கு ஓட்டுநர் உரிமம் இருக்கவேண்டும் என்றால் சரிதான். இறந்துபோன செல்வராஜ்க்கு ஓட்டுநர்உரிமம் இல்லையென்றால் இருந்தது என்று சொன்னார்கள். விபத்து சம்மந்தமாக நான் புகார் கொடுக்கவில்லை. என்மீது வழக்கு பதிவுசெய்தார்கள். விபத்து சம்மந்தமாக தொழிற்சாலையில் இருந்தவர்கள் புகார் கொடுத்தார்கள். அவர்கள் என்ன புகார் கொடுத்தார்கள் என்று தெரிந்துகொண்டேனா என்றால் கீழே தவறி விழுந்ததாக புகார் கொடுத்தார்கள் என்று தெரிந்துகொண்டேன். தொழிற்சாலைக்குள் வேகமாக வண்டியை ஓட்டமுடியாது என்றால் சரிதான். என்மீது வழக்கு பதிவுசெய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பதிவுசெய்ததாக தான்

சொன்னார்கள். இறந்துபோனவரும் நானும் ஒரே ஊர்காரர்கள். விபத்திற்கு இறந்துபோனவர் தான் காரணம் என்றும், அதிலிருந்து தப்பிபதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வேகமாக வாகனத்தை ஓட்டிசென்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மோட்டார்வாகனஆய்வாளர் என்னுடைய வாகனத்தை பார்வையிட்டார். அவருடைய அறிக்கையில் என்ன சொல்லியுள்ளார் என்று தெரியாது. என்மீது போடப்பட்ட குற்றவழக்கில் நான் விடுதலைஆகிவிட்டேன். நான் சொல்வது போன்று வண்டி வேகமாக செல்லவில்லை என்றும், கதவு திறந்துகொண்டு செல்வராஜ் கீழே விழவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் வாகனத்தை ஓட்டவில்லை என்றும், மனுதாரர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. இறந்துபோனவர் என்னுடன் வாகனத்தில் மாற்று டிரைவராக வரவில்லை என்றால் சரியல்ல. நான்கூறுவது போன்று அவர் மாதம் ரூ.15000/– சம்பளம் பெறவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.